


05. 10. 2025

தலைப்பு செய்திகள்

- இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் புபனேஸ்வர் IIT-இல் செமிகண்டெக்டர் ஆய்வகம், அமைக்கப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- நாடுமுழுவதும் கடந்த 6 ஆண்டுகளில் 17 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் வேலை வாய்ப்பு அமைச்சகம் கூறியுள்ளது.
- வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளை விரைந்து மேற்கொள்ள முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
- திருச்சி, சேலம், நாமக்கல், உள்ளிட்ட 12 மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.
- ஐ.சி.சி உலக கோப்பை, ஒரு நாள் சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

***********

அஷ்விணி வைஷ்ணவ்

இந்தியாவில் தயாரிப்போம் மற்றும் இந்தியாவில் வடிவமைப்போம் உள்ளிட்ட திட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் புபனேஸ்வர் IIT இல் 4 கோடியே 95 லட்ச ரூபாய் மதிப்பில் நமோ செமி கண்டெக்டர் ஆய்வகம் அமைக்க மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் ஒப்புதல் அளித்துள்ளார்.

தற்போது நாடுமுழுவதும் அதிகரித்து வரும் சிப் எனப்படும் நுண் தகடு உற்பத்திக்கு இந்த ஆய்வகங்கள் பயனளிக்கும் என்றும், திறன்மிகு இளைஞர்களை தொழில்துறைக்கு தயார்படுத்த முடியும் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

***********

மாண்டவியா

நாடுமுழுவதும் 10 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட இடங்களில் ஞாயிறு தோறும் சைக்கிள் பயிற்சி இன்று நடைபெறுவதாக மத்திய இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சர்வதேச ஆசிரியர் தினத்தை ஒட்டி இன்று நடைபெற்ற சைக்கிள் பயிற்சியில் பேசிய அவர், ஆசிரியர்கள் மாணாக்கருக்கு உத்வேகம் அளிப்பவர்களாக திகழ்வதாக கூறினார்.

இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாணாக்கருக்கும், சமூகத்திற்கு சிறந்த வாய்ப்பாக திகழ்வதாக கூறினார்.

***********

வேலை வாய்ப்பு

நாடுமுழுவதும் கடந்த 6 ஆண்டுகளில் 17 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஸ்டாட் அப் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் அமைக்கப்பட்டதன் காரணமாக சுய தொழில் புரிவோரின் விகிதம் 58.4 ஆக அதிகரித்துள்ளது.

ரோஜ்கர் மேளா, பிரதமரின் விஸ்வகர்மா திட்டம், விக்சித் பாரத் ரோஜ்கர் யோஜனா, லட்சாதிபதி மகளிர் உள்ளிட்ட பல்வேறு முன் முயற்சிகள் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாக அமைச்சகம் கூறியுள்ளது.

***********

முதலமைச்சர்

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் நடைபெறும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் கழிவுநீர் குழாய்கள் விரிவாக்க பணிகளை இன்று நேரில் ஆய்வு செய்த அவர், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இப்பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

***********

வள்ளலார்

கடலூர் மாவட்டம் வடலூர் திருவருட் பிரகாச வள்ளலாரின் 203ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் அன்னாரது கொள்கைகளை பின்பற்றி அனைவரது உள்ளங்களிலும் கருணை நிலைக்கட்டும் என கூறியுள்ளார்.

***********

சேகர்பாபு

வள்ளலார் சர்வதேச மாநாடு சென்னையில் விரைவில் நடைபெறும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

வள்ளலாரின் பிறந்த தினத்தை ஒட்டி வடலூர் வள்ளலார் சத்ய ஞான சபையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இம்மாநாட்டில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ள உள்ளதாகவும், வள்ளலாரின் வரலாறு குறித்த புத்தகம் வெளியிடப்படும் என்றும் கூறினார்.

***********

மா.சுப்பிரமணியன்

பருவநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

இதேபோல் ஈரோடு மாவட்டம் பூந்துறையில் இயற்கை பாதுகாப்பு மற்றும் குழந்தைகள் செல்ஃபோன் பயன்பாட்டை தவிர்க்க வலியுறுத்தி விழிப்புணர்வு மாரத்தான் போட்டிகள் இன்று நடைபெற்றன.

***********

நயினார் நாகேந்திரன்

தமிழகத்தில் குற்றவாளிகளாக சந்தேகிக்கப்படுவர்கள் மீது காவல்துறையின் தாக்குதல்கள் தடுக்கப்பட வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட புள்ளி விவரங்களை மேற்கோள்காட்டி அவர் வெளியிட்ட செய்தியில் இப்பிரச்சனையில் அப்பாவி பொதுமக்கள் தண்டிக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்றும், முதலமைச்சர் இதில் நேரடி கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

***********

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக திருச்சி, சேலம், நாமக்கல், மதுரை தேனி விருதுநகர் திண்டுக்கல் திருப்பத்தூர் தர்மபுரி கிருஷ்ணகிரி சிவகங்கை ராமநாதபுரம் மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

***********

அணை

ஆந்திர நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக வேலூர் மாவட்டம் மோர்தானா அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளதை அடுத்து அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

இதன் காரணமாக சேம்பள்ளி, ஜிட்டபள்ளி, பெரும்பாடி, சீவூர், குடியாத்தம் உள்ளிட்ட கரையோர கிராம மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி அறிவுறுத்தியுள்ளார்.

தமிழக – ஆந்திர எல்லையான கொசஸ்தலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை அடுத்து தரைப்பாலம் மூழ்கியுள்ளதால் பொதுமக்கள் அப்பகுதிக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி அணையிலிருந்து, வினாடிக்கு 2 ஆயிரத்து 400 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுவதால் 16 ஊராட்சிகளை சேர்ந்த கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

திருப்பத்தூரில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கன மழையால் ஜலகாம்பாறை நீர்வீழ்ச்சியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு இன்று வினாடிக்கு 5 ஆயிரத்து 256 கன அடியாக குறைந்துள்ளது.

அணையிலிருந்து பாசனத்திற்காக 18 ஆயிரத்து 500 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

***********

நாகை

நாகை மாவட்டத்தில் குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் இம்மாதம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படும் என ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

கரூர் - அதிகாரிகள்

கரூர் சம்பவம் தொடர்பாக காவல்துறை தலைவர் அஸ்ராக் கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழுவில் மேலும் 8 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவில் ஆய்வாளர்கள், காவல்துறை துணை கண்காணிப்பாளர், காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர், தடயவியல் நிபுணர்கள் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இதனிடையே இச்சம்பவம் தொடர்பாக தவெக பிரச்சார வாகன ஓட்டுநர் உட்பட மூன்று பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

***********

தேர்வு

கைவினைஞர் பயிற்சி திட்டத்தின் கீழ் அகில இந்திய தொழில் தேர்வு அடுத்த ஆண்டு ஜூலை மாதம் நடைபெற உள்ளது.

தகுதியுடைய சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த தனித்தேர்வர்கள் வரும் 8 ஆம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் கூட்டுறவு சங்கங்களில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு வரும் 11ஆம் தேதி நடைபெறுகிறது.

இதற்கான தேர்வு கூட நுழைவு சீட்டுகளை தேர்வர்கள் இன்றுமுதல் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

***********

ரயில்

பயணிகளின் வசதிக்காக மதுரை, நெல்லையிலிருந்து – தாம்பரத்திற்கு முன்பதிவில்லா சிறப்பு ரயில் இன்று இயக்கப்படுகிறது.

நெல்லையிலிருந்து மாலை மணி 4.50க்கும்

மதுரையிலிருந்து இரவு 7 மணிக்கும், இந்த ரயில் புறப்படும்.

***********

கன்னியாகுமரி

விடுமுறை நாளை ஒட்டி கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலா தலங்களில் இன்று சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

கிரிக்கெட்

ஐ.சி.சி உலக கோப்பை, ஒரு நாள் சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

கொழும்புவில் பிற்பகல் 3 மணிக்கு இப்போட்டி நடைபெறும்.

***********

பேட்மிண்டன்

அபுதாபியில் நடைபெறும் ஆல் ஜன் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் தஷ்னிம் மிர் - சக வீராங்கணை ஷ்ரியான்ஷி வாலிஷெட்டியை இன்று எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் ஹரிஹரன், அர்ஜுன் இணை - இந்தோனேசிய இணையை எதிர்கொள்கிறது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது